பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை

24 03 2025 **MONDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. சத்தீஸ்கரில் நக்சலைட் பிரச்சினைக்கு விரைவில் முற்றுபுள்ளி வைக்கப்படும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.
2. மக்களவையில் நிதி மசோதா மீதான விவாதம் இன்று தொடங்கியது.
3. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஊதியம் 24 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது.
4. சென்னை சர்வதேச விமான நிலையத்தின் இரண்டாம் கட்டப்பணிகளை அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள் நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.
5. இந்தியன் ஓபன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் **Veer Chotrani** மற்றும் தன்வி கண்ணா இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

<u>இனி விரிவான செய்திகள் ---</u>

<<<<<>>>>>

சத்தீஸ்கரில் நக்சலைட் பிரச்சினைக்கு விரைவில் முற்றுபுள்ளி வைக்கப்படும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

சத்தீஸ்கர் சட்டப்பேரவையின் வெள்ளி விழா நிகழ்ச்சியில் இன்று கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

ஜனநாயக பாரம்பரியம் மிக்க சத்தீஸ்கர் சட்டப்பேரவையின் 25 ஆண்டுகால வரலாற்று சிறப்புகளை அவர் எடுத்துரைத்தார்.

இயற்கை வளங்களை முழுமையாக கொண்ட மாநிலமாக சத்தீஸ்கர் திகழ்கிறது என்றும் அவர் கூறினார்.

சத்தீஸ்கரின் வளர்ச்சி மேலும் விரைவுபடுத்தப்படும் என்றும் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்தார்.

<<<<<>>>>>

தில்லி உயர்நீதிமன்ற நீதிபதி திரு யஷ்வந்த் வர்மா வீட்டில் ரூபாய் நோட்டுக்கள் கண்டெடுக்கப்பட்ட பிரச்சினை குறித்து மாநிலங்களவைத் தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் இன்று புதுதில்லியில் எதிர்க்கட்சித்தலைவர் மற்றும் அவை முன்னவருடன் ஆலோசனை மேற்கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அவை முன்னவர் திரு ஜெ பி நட்டா மற்றும் எதிர்க்கட்சித்தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே பங்கேற்ற இந்த ஆலோசனைக்கூட்டத்தில் இப்பிரச்சினை குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டதாக தெரிவித்தார்.

நாடு சுதந்திரம் அடைந்த பிறகு முதல் முறையாக தலைமை நீதிபதி இப்பிரச்சினை தொடர்பான விவரங்களை வெளிப்படைத்தன்மையுடன் பொதுவெளியில் வெளியிட்டுள்ளதாக கூறியுள்ளார்.

இதுதொடர்பாக, அனைத்துக்கட்சி தலைவர்களுடன் ஆலோசனை நடத்தப்பட வேண்டியது அவசியமாகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

இக்கூட்டத்திற்கு விரைவில் அழைப்பு விடுக்கப்படும் என்றும் திரு ஜெக்தீப் தங்கர் கூறினார்.

இதற்கிடையே, நீதிபதி திரு யஷ்வந்த் வர்மாவை அலகாபாத் உயர்நீதிமன்றத்திற்கு மாற்றுவதற்கு, உச்சநீதிமன்ற நீதிபதிகள் குழுமம் பரிந்துரை செய்துள்ளது.

<<<<<>>>>>>

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஊதியம் 24 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது.

இதற்கான அறிவிக்கையை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

இந்த ஊதிய உயர்வு அடுத்த மாதம் ஒன்றாம் தேதிமுதல் செயல்பாட்டிற்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஊதியம் ஒரு லட்சத்திலிருந்து, ஒரு லட்சத்து 24 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

தினசரி படி 2 ஆயிரம் ரூபாயிலிருந்து, 2 ஆயிரத்து 500 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியமும் 25 ஆயிரம் ரூபாயிலிருந்து, 31 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

நிதி மசோதா மீதான விவாதம் மக்களவையில் இன்று தொடங்கியது.

விவாதத்தை தொடங்கிவைத்து பேசிய காங்கிரஸ் உறுப்பினர் திரு சசிதரூர், தற்போதுள்ள சரக்கு மற்றும் சேவை வரிவிதிப்பு முறை எளிமைப்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

வரி செலுத்தும் மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் அரசு செயல்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இந்த விவாதத்தில் பங்கேற்று பேசிய பிஜேபி உறுப்பினர் திரு **Nishikant Dubey,** சர்வதேச அளவில் பொருளாதாரம் தேக்க நிலையில் உள்ள போதிலும், நம் நாட்டின் பொருளாதார வளர்ச்சி சீராக உள்ளது என்று தெரிவித்தார்.

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக நாட்டின் பொருளாதாரம் வலுவாக உள்ளது என்றும் அவர் கூறினார்.

சமாஜ்வாதி உறுப்பினர் திரு நீரஜ் மௌரியா இந்த விவாதத்தில் பங்கேற்று பேசுகையில், பிற்படுத்தப்பட்டோர், ஷெட்யூல்டு வகுப்பினர், பழங்குடியினர் மற்றும் சிறுபான்மையினருக்கு பட்ஜெட்டில் கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

<<<<<>>>>>>

நாட்டின் வனப்பரப்பு 25 சதவீதத்திற்கும் கூடுதலாக அதிகரித்துள்ளது என்று சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு புபேந்தர் யாதவ் கூறியுள்ளார்.

இன்று மக்களவையில் இதனை தெரிவித்த அவர், வன பாதுகாப்பை உறுதி செய்வதற்காக மாநில அரசுகளுக்கு நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை மத்திய அரசு வழங்கி வருவதாக கூறினார்.

<<<<<>>>>>

சென்னை சர்வதேச விமான நிலையத்தின் இரண்டாம் கட்டப்பணிகளை அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள் நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளதாக சிவில் விமான போக்குவரத்துத்துறை இணையமைச்சர் திரு முரளிதர் மோஹல் கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், சென்னை விமான நிலையத்தை நவீன மயமாக்குவதற்கான பணிகள் 2 ஆயிரத்து 467 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>

கேரள மாநில பிஜேபி தலைவராக திரு ராஜீவ் சந்திரசேகர் இன்று பொறுப்பேற்றுக்கொண்டார்

திருவனந்தபுரத்தில் உள்ள கட்சி தலைமையகத்தில் இப்பொறுப்பினை ஏற்றுக்கொண்ட பின்னர் உரையாற்றிய அவர், கேரளாவில் தேசிய ஜனநாயக கூட்டணி அரசை ஏற்படுத்த அனைவரும் உறுதியேற்போம் என்று கேட்டுக்கொண்டார்.

இப்பொறுப்பினை வழங்கியதற்காக பிரதமர் திரு நரேந்திர மோடிக்கும், பிஜேபி தலைவர் திரு ஜெ பி நட்டாவுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்வதாக திரு ராஜீவ் சந்திரசேகர் தெரிவித்தார்.

இதற்கிடையே, மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன், திரு ராஜீவ் சந்திரசேருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, சமூக வலைதளத்தில் விடுத்துள்ள செய்தியில், இப்பொறுப்பில் பல்வேறு சாதனைகளை அவர் படைப்பார் என்று குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>

தில்லியில் சுகாதார கட்டமைப்புகள் அடுத்த சில மாதங்களுக்குள் மேம்படுத்தப்படும் என்று அத்துறைக்கான அமைச்சர் திரு பங்கஜ் சிங் கூறியுள்ளார்.

தில்லி சட்டப்பேரவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், சுகாதாரத்துறையில் நிலவிவரும் பணியாளர் பற்றாக்குறைக்கு விரைவில் தீர்வுகாணப்படும் என்றார்.

மருத்துவ உபகரணங்களை கொள்முதல் செய்வதற்கான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்படும் என்றும் திரு பங்கஜ் சிங் கூறினார்.

<<<<<>>>>>

ஆந்திராவில் பருவம் தவறி பெய்த மழை காரணமாக பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு உரிய நிவாரண உதவிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அம்மாநில வேளாண்துறை அமைச்சர் திரு **Atchannaidu** கூறியுள்ளார்.

அமராவதியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பாதிப்பு குறித்து அதிகாரிகள் ஆய்வு செய்து வருவதாக கூறினார்.

வாழை விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ஒரு லட்சம் ரூபாய்க்கும் கூடுதலாக மானியம் வழங்கப்படுவதாக அவர் கூறினார்.

விவசாயிகளுக்கு எப்போதும் உறுதுணையாக ஆந்திர அரசு இருக்கும் என்றும் திரு **Atchannaidu** தெரிவித்தார்.

<<<<<>>>>>

ஜம்மு காஷ்மீரில் போலி குடும்ப அட்டைகளை களைவதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று உணவு அமைச்சர் திரு சதீஷ் சர்மா கூறியுள்ளார்.

ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், பொது விநியோகத் திட்டப் பயனாளிகளின் விவரங்களை சரிபார்க்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

ஜம்மு காஷ்மீரில் புதிதாக ஆயிரத்து 500 நியாய விலைக்கடைகளை தொடங்குவது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும் திரு சதீஷ் சர்மா கூறினார்.

<<<<<>>>>>

12-ஆம் வகுப்பு பொதுத்தேர்வுகளில் கால்குலேட்டர்களை அனுமதிக்கும் திட்டம் குறித்து பரிசீலிக்கப்பட்டு வருவதாக சிபிஎஸ்இ கூறியுள்ளது.

இதற்கொன குழு ஒன்று அமைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து இக்குழு உரிய ஆலோசனைகளை மேற்கொண்டு பரிந்துரைகளை சமர்ப்பிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>

இந்திய கடற்படை பல்வேறு ஆப்பிரிக்க நாடுகளுடன் இணைந்து கூட்டு பயிற்சியை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடற்படையின் துணை தளபதி வைஸ் அட்மிரல் **Tarun Sobti,** மகா சாகர் இயக்கத்தின்கீழ் இந்த கூட்டு பயிற்சிகள் மேற்கொள்ளப்பட உள்ளதாக தெரிவித்தார்.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தியன் ஓபன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் **Veer Chotrani** இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.
மும்பையில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 11-6, 11-7, 11-2 என்ற செட் கணக்கில் இந்தியாவின் சூரஜ்குமார் சந்த்-ஐ வென்றார்.
மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் தன்வி கண்ணா-வும் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

--------------

உலகக்கோப்பை **Sepak Takraw** சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று வெண்கலப்பதக்கம் வென்றது.
பாட்னாவில நடைபெற்றுவரும் இப்போட்டியின் கலப்பு குழு பிரிவில் இந்தியா இப்பதக்கத்தை கைப்பற்றியது.

-----------------

கேலோ இந்தியா பாரா விளையாட்டுப்போட்டியில் தமிழகத்தின் பிரகதீஸ்வர ராஜா மற்றும் தங்கபாண்டி தங்கப்பதக்கம் வென்றனர்.
புதுதில்லியில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் 100 மீட்டர் ஓட்டத்தில் அவர்கள் இப்பதக்கத்தை கைப்பற்றினர்.
மகளிர் 200 மீட்டர் ஓட்டத்தில் அமுல்யா ஈஸ்வரி வெண்கலப்பதக்கம் வென்றார்.
இப்போட்டியில் தமிழகம் இதுவரை 24 தங்கம், 15 வெள்ளி, 25 வெண்கலப்பதக்கங்களுடன் பதக்கப்பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ளது.

<<<<<END>>>>>>